தேதி- ஜனவரி 31, 2014

# காங்கரஸில் படபடப்பு

**- அருண் ஜெய்ட்லி**

*எதிர்கட்சி தலைவர் (மாநிலங்களவை)*

தேர்தல் நெருங்கிவரும்வ் வேளையில் காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் படபடப்பு கண்கூடாகத் தெரியத் தொடங்கிவிட்டது. ஒவ்வொருவரும் காங்கிரஸ் கட்சி செயலூக்கத்துடன் போட்டியில் ஈடுபட வேண்டும் என்பதை விடுத்து தங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்வதிலேயே தீவிர கவனம் செலுத்திவருகின்றன.

அமேதி காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக இருந்தது அது ராகுல் காந்தியின் தொகுதி அந்தத் தொகுதி கட்ந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக காங்கிரஸ் குடும்பத்தால் சிறப்பாக போஷிக்கப்பட்டுவருகிறது. . ஆனால் அமேதியின் அரசர் சஞ்சய் சிங் தனக்கெதிராக போட்டியிடக் கூடும் என்ற யோசனையே காங்கிரஸ் கட்சியின் நடைமுறை சாத்தியமான பிரதமர் வேட்பாளரான ராகுல் காந்தியை அச்சுறுத்தப் போதுமானதாக இருக்கிறது. The Raja of Amethi had to be accommodated in the Rajya Sabha from Assam. அமேதியின் அரசரை அஸாமின் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அமேதி என்ற தொகுதியைக் காப்பாற்ற அதைச் சுற்றி நெருப்புவலை போன்ற ஒன்று பின்னப்பட்டது. மேலும். நடப்பு நாடாளுமன்ற் உறுப்பினருக்கு எதிராக சிறுபான்மையினத்தைச் சேர்ந்த வேட்பாளரை நிறுத்திவிடக் கூடாது என்பதற்காக சமாஜ்வாதி கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியுடன் பேரம் பேச வேண்டியிருக்கிறது. . இந்த செயல்முறையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தனது படப்டப்பை வெளிப்படுத்தியிருப்பதோடு அஸாமில் கட்சியின் வெற்றிவாய்ப்பு கேள்விக்குறியாகியிருப்பதும் வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. . குறிப்பாக வட கிழக்கு மாநிலங்கள் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகியவை உணர்ச்சிகரமானவர்கள். அவர்கள் மாநிலங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்கள்.

இந்தத் தேர்தலில் கட்சியின் பிரச்சாரத்தை முன்னின்று வழிநடத்தியிருக்க வேண்டிய ஹரியானா, ஹிமாச்சல பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் மேல்வைக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பை கோரியிருக்கிறார்கள். .

கூட்டணிக் கட்சிகளின் நிலையும் எந்த வகையிலும் வேறுபடவில்லை. .திருணமூல் காங்கிரஸ், தி.மு.க மற்றும் தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி ஆகியவை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து ஏற்கனவே விலகிவிட்டன. . இப்போது கூட்டணியில் நீடிக்கும் கட்சிகளில் தேசிய வாத காங்கிஸும் தேசிய கான்ஃபரன்ஸ் கட்சியும் மட்டுமே முதன்மையானவை தேசியவாத காங்கிரஸ் தினமும் முன்னுக்குப் பின் முரணான சமிஞைகளை கொடுத்த்துக் கொண்டிருக்கிறது. குஜராத்தில் 2002இல் நடந்த கல்வரங்கள் குறித்த அக்கட்சியின் அறிக்கைகள் இதே விஷயத்தில் காங்கிரஸ் கட்சியின் .நிலைப்பாட்டிலிருந்து வேறுபடுகின்றன. புது தில்லியில் ஆண்டுகொன்டிருக்கும் கட்சியுடன் கூட்டணியைத் தொடர்ந்தால் காஷ்மீர் பள்ளத்தாக்கில் தனக்கு தீங்கு விளையக் கூடும் என்று தேசிய கான்ஃபரன்ஸ் கட்சி உணர்ந்துவிட்டது. எனவே அது முறிவுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது.

.காங்கிரஸ் கட்சியின் எந்த மாநில கிளையும் மத்திய தலைமையை எதிர்க்கும் தைரியத்தை அண்மைக் கால வரலாற்றில் வெளிப்படுத்தியதில்லை.ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான காங்கிரஸ் உறுப்பினர்கள், தெலங்கானா விவகாரத்தில் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராகச் செயல்பட முடிவு செய்துவிட்டனர். ஆந்திர பிரதேசத்தில் நடக்கும் மாநிலங்களவை தேர்தலில் மாற்றுக் கட்சிக்கு வாக்களிப்பதே இதன் அடுத்த கட்டமாக இருக்கும். 2004இலும் 2009இலும் காங்கிரஸுக்கு அதிக தொகுதிகளை அளித்த மாநிலத்தில் இவையனைத்தும் பிளவை ஏற்படுத்தும்.

இறுதியாக என் நண்பரும் மத்திய நிதி அமைச்சருமான ப.சிதம்பரம் நிதியமைச்சக அலுவலகத்துக்குப் பிந்தைய வாழ்க்கையை திட்டமிடத் தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது. .அவர் மிகவும் தகுதி வாய்ந்த வழக்கறிஞர். நாடாளுமன்றத்தின் இழப்பு உச்சநீதிமன்றத்தின் வரமாக அமையலாம். . From the kind of statements he is making and the academic questions he is posing to his opponents அவர் வெளியிடும் அறிக்கைகளும். எதிர்களை நோக்கி எழுப்பும் கல்வி சார்ந்த கேள்விகளும். பத்திரிகைகளில் பத்தி எழுதும் பணிக்கு மீண்டும் செல்லப் போகிறார் என்ற என்னை

சந்தேகிக்க வைக்கின்றன. அவர் எழுதும் பத்திகள் படிப்பதற்கு மிகச் சிறப்பானவையாக இருக்கும் என்பது உறுதி.

ôôôôô